சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ம் நாள் செவ்வாய்கிழமை

இடைமனு எண்.4/2026

இன்

அசல் வழக்கு எண்.120/2017

....

மணியரசன்
(மேற்படியாரின் மனைவியும் பவர்
ஏஜண்டுமான தேவி மூலம்) ....மனுதார்/பிரதிவாதி

..எதிர்..

நாச்சியப்பன் .....எதிர்மனுதார்/வாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 17.04.2026-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.N.சேகர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.J.வேலாயுதம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

## <u>உத்தரவு</u>

தாவா வழக்கில் இந்த மனுவில் கண்ட ஆவணங்களை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலாமல் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதை மன்னித்து ஆவணங்களை ஏற்றுக் கொள்ள உத்தரவிட வேண்டி சிபிசி ஆர்டர் 8 ரூல் 1(3) மற்றும் சிபிசி section 151-ன் படி இந்த மனு தாக்கல் செய்யப்படுகிறது.

2. <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>

மனுதாரரது கணவராகிய பிரதிவாதியின் மீது வாதியாகிய நாச்சியப்பன் என்பவர் வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த 11-06-2015-ம் தேதிய கிரையை ஒப்பந்தத்தின்படி

கிரைய பாக்கி தொகை ரூ.50,000/-ஐ பிரதிவாதி வாதியிடமிருந்து பெற்றுக் கொண்டு தாவாச் சொத்தினை பொறுத்து வாதிக்கு பிரதிவாதி வாதியின் செலவில் கிரையப் பத்திரம் எழுதி பதிந்து கொடுக்கும்படிக்கும் தவறும் பட்சத்தில் நீதிமன்றமே வாதிக்கு பிரதிவாதி ஸ்தானத்திலிருந்து கிரையப் பத்திரம் பதிவு செய்து கொடுக்கத்தக்கதாய் "ஏற்றதை ஆற்றுக" பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து விசாரணையில் இருந்து வருகிறது.

மேற்படி தாவா வழக்கின் தாவாச் சொத்து என்பது மனுதார்/பிரதிவாதியின் தாயாரும், மாமியாருமாகிய கருப்பாயி என்ற கண்ணாத்தாள் என்பவரால் கடந்த 10.02.1960-ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் கிரையம் வாங்கப்பட்ட சொத்து ஆகும். மேற்படி தாவா வழக்கின் தாவாச் சொத்தினை மனுதாரின் மகன் கணபதி ராமச்சந்திரன் என்பவருக்கு மனுதாரரின் மாமியார் கருப்பாயி என்ற கண்ணாத்தாள் என்பவர் கடந்த 07-07-1997-ம் தேதியன்று தகுந்த சாட்சிகள் கையொப்பம் செய்து நோட்டரி பப்ளிக்/அட்வகேட் முன்னிலையில் உயில் சாசனப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி தாவா வழக்கின் தாவாச் சொத்தினுள் மனுதார்/பிரதிவாதியின் மகன் கணபதி ராமச்சந்திரன் என்பவரின் அனுபவத்தை மனுதாரர்/பிரதிவாதியும் எதிர்மனுதாரர்/வாதியும் தடையிடர் செய்ததால் மேற்படியார்கள் மீது இந்நீதிமன்றத்தில் மனுதாரின் மகன் சிவில் வழக்கு தாக்கல் செய்து அதுவும் O.S.No.343/2024 என்ற நம்பரில் விசாரணையில் இருந்து வருகிறது. மேற்படி மனுதாரின் மாமியார் கருப்பாயி என்ற கண்ணாத்தாள் என்பவருக்கும் மனுதாரர்/பிரதிவாதியின் மாமனார் லெட்சுமணன் என்பவருக்கும் மனுதாரின் கணவரும் தாவா வழக்கின் மனுதார்/பிரதிவாதி- ராஜேந்திரன், பெரியதம்பி, சீதையம்மாள், ஆதினமிளகி, சகுந்தலை, கௌசல்யா, ராமநாதன், ரவீந்திரன், ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள்.

மேற்படி தாவா வழக்கின் தாவாச் சொத்து சம்பந்தமாக இந்நீதிமன்றத்தில் மனுதாரின் மகன் தாக்கல் செய்துள்ள O.S.No.343/2024 என்ற வழக்கின் பிராது நகலும், மேற்படி தாவா வழக்கின் தாவாச் சொத்தினை மனுதாரின் மாமியார் மனுதாரின் மகனுக்கு எழுதி வைத்துள்ள உயில் சாசனப் பத்திரமும், மேற்படி தாவா வழக்கின் தாவாச் சொத்தினுள் கட்டப்பட்டுள்ள ஓட்டு வீட்டிற்கு மனுதாரின் மகன் பெயரில் செலுத்தியுள்ள வீட்டு வரி ரசீதும், மனுதாரின் மாமனார் லெட்சுமணன்

என்பவரின் இறப்புச் சான்றிதழும், மனுதாரின் மாமியார் கருப்பாயி என்ற கண்ணாத்தாள் என்பவரின் இறப்புச் சான்றிதழும், மனுதாரின் மாமனார் லெட்சுமணன் என்பவரின் வாரிசு சான்றிதழும், மனுதாரின் மாமியார் கருப்பாயி என்ற கண்ணாத்தாள் என்பவரின் வாரிசு சான்றிதழும் தாவா வழக்கின் தாவாச் சொத்தினை மனுதாரின் மாமியார் பதிவுக் கிரையப் பத்திரத்தின் மூலம் கிரையப் பத்திரமும் மனுதாரருக்கு தற்சமயம்தான் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்நிலையில் மேற்படி வழக்கின் தாவாச் சொத்து என்பது வழக்கின் மனுதார்/பிரதிவாதியும், தனது கணவருமாகிய மணியரசன் என்பவருக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து இல்லை. மேற்படி வழக்கின் தாவாச் சொத்தினை மனுதாரின் கணவரும் இந்த வழக்கின் மனுதாரர்/பிரதிவாதியுமாகிய மணியரசன் என்பவருக்கு பாத்தியப்படுத்தி மனுதாரின் மாமியார் கருப்பாயி என்ற கண்ணாத்தாள் என்பவர் எந்தவிதமான ஆவணங்களும் எழுதி வைக்கவில்லை என்பதையும், மேற்படி வழக்கின் தாவாச் சொத்து மனுதாரின் மாமியாரின் மற்ற வரிசுகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்பதையும் தாவா வழக்கின் தாவாச் சொத்தைப் பொறுத்து மனுதாரின் மாமியார் மனுதாரின் மகனுக்கு உயில் சாசனப் பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்து விட்டார் என்பதையும் மனுதாரின் கணவரும் மனுதாரர் மணியரசன் என்பவருக்கு தாவா வழக்கின் தாவாச் சொத்தினை பொறுத்து தாவா வழக்கின் எதிர்மனுதாரருக்கு கிரைய ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுப்பதற்கு சட்டரீதியாகவோ தார்மீக ரீதியாகவோ எந்தவிதமான உரிமைகளும் இல்லை என்பதையும் இந்நீதிமன்றத்திற்கு நிரூபிப்பதற்கு மேற்படி ஆவணங்கள் தாவா வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆவணங்கள் ஆகும். மேற்படி ஆவணங்களை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய முடியாமல் போனது வேண்டுமென்றோ தவறுகையாலோ ஏற்பட்டதல்ல. இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ளாது போனால் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத கஷ்டங்களுக்கும், நஷ்டங்களும் ஏற்பட்டுவிடும். மேற்படி ஆவணங்களை ஏற்றுக் கொள்வதில் எதிர்மனுதாருக்கு யாதொரு ஆட்சேபணைகளும் இருக்கக் கூடியதில்லை. எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிடவேண்டும்.

### 3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்.</u>

மனுதாரர் தனது மனுவில் கோரி இருப்பதுபோல் யாதொரு பரிகாரமும் சட்டப்படியும், நியாயப்படியும் மனுதாருக்கு கிடைக்கதக்கதல்ல. மனுதார்

வேண்டுமென்றே உண்மைகளை மறைத்து பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் தாவா மனுவினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் தன்னுடைய மனுவில் கோரியிருக்கும் சங்கதிகளை மனுதாரரே சாட்சிகள் மூலமும், மற்றும் சான்றாவணங்கள் மூலமும், நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேலும் பிரதான வழக்கில் ஏற்றதை ஆற்றுக பரிகாரமும், கோரி தாவா அசல் வழக்கை தாக்கல் செய்தள்ளார். மேலும் எதிர்மனுதாரர்/வாதி வாதியிடம் ரூ.5,50,000/-ஐ தாவா சொத்தின் மொத்தக்கிரையத் தொகையாக நிர்ணயம் செய்து அதில் ரூ.5,00,000/-ஐ முன்தொகையாக பெற்றுக்கொண்டு கடந்த 11.06.2015-ம் தேதி மனுதார்/பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் பதிவுசெய்து கொடுத்துள்ளார். மேற்படி கிரைய பாக்கித் தொகையினை அன்றிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்குள் வாதியிடம் பெற்றுக்கொளண்டு கிரையப் பதிவு செய்து தருவதாக ஒரு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொண்டுள்ளார்கள். ஆனால் மனுதாரர்/பிரதிவாதி எதிர்மனுதாரர்/ வாதியை ஏமாற்றும் நோக்கத்தோடு செயல்பட்டு வந்ததால் எதிர்மனுதாரர்/வாதி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாவா அசல் வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதார்/வாதி தாவா சொத்தின் வில்லங்க விவகாரங்களை ஆய்வு உரிய மறுபயன் கொடுத்து மேற்படி கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி உள்ளார். மேலும் மனுதாரர்/பிரதிவாதி பேரில் தனித்து பட்டா ஏற்பட்டு பட்டா எண்.3235 வெளியாத்தூர் கிராமத்தில் புலஎண்.261/4A என வகைப்படுத்தபட்டு அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர்/வாதி கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி உள்ளார். தாவா வழக்கிடை சொத்துக்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கின் நடவடிக்கையை திசை திருப்ப முற்பட்டு வருகிறார். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள தாவா மனுவினை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

6. மனுதாரரின் மனுவில் O.S.No.343/2024 வழக்கின் பிராது, கணபதி ராமச்சந்திரன் என்பவருக்கு எழுதி வைத்துள்ள உயில் சாசன பத்திரம், மனுதாரர் மகன் பெயரில் செலுத்தியுள்ள வீட்டு வரி ரசீது, லெட்சுமணன் என்பவரது இறப்புச்சான்றிதழ், கருப்பாயி (எ) கண்ணாத்தாள் என்பவரின் இறப்புச்சான்றிதழ், லெட்சுமணன் என்பவரின் வாரிசு சான்றிதழ், கருப்பாயி (எ) கண்ணாத்தாள் என்பவரின் வாரிசு சான்றிதழ், மனுதாரர்/பிரதிவாதியின் தாயார் பதிவு கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் ஆகிய ஆவணங்களை உரிய நேரத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து ஆவணங்களை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கிடை சொத்துக்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கின் நடவடிக்கையை திசை திருப்ப முற்பட்டு வருவதாக எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

7. அசல் வழக்கானது "ஏற்றதை ஆற்றுக" பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/ வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தன்னுடைய வழக்கிற்கு ஆதரவாக மேற்படி ஆவணங்களை தனது தரப்பில் குறியீடு செய்யவேண்டி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. எனவே தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்வதில் எந்தவிதத்திலும் எதிர்மனுதாரருக்கு பாதிப்பு ஏற்படுத்தாது என்பதை கருதத்தில் கொண்டு மேற்படி ஆவணங்களை Subject to proof and relevancy என்ற அடிப்படையில் மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டி இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.28 17:33:02 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.28 17:33:13 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court, Sivagangai
I.A.No.4/2026 in
O.S.No.120/2017
**Draft/Fair/Order**
28.04.2026.